## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, DINDIGUL

| | |
|---|---|
| Case No | : CC. 600 /2018 |
| Deposition of witness for PW | : 4 |
| பெயர் | : தேசிகாச்சாரி |
| கணவர் பெயர் | : கிருஷ்ணமாச்சாரி |
| கிராமம் | : பாளையங்கோட்டை, திருநெல்வேலி |
| மதம் | : |
| வேலை | : ஆசிரியர் ஓய்வு |
| வயது | : 72 |
| நாள் | : 11.09.2024 |

**எதிரிகள் ஆஜர்.**

**அரசு தரப்பு முதல் விசாரணை**

நான் தற்போது திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டையில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் ஓய்வு பெற்ற ஆசிரியர் ஆவேன். ஆஜர் எதிரிகளை தெரியும். நத்தத்தை சேர்ந்த செந்தில் குமார் எனது மகன் வெங்கடேஷ்க்கு பழக்கமானவர். அந்த சமயத்தில் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் வேலைக்காக விளம்பரம் செய்து இருந்தார்கள். செந்தில்குமாருக்கு நத்தத்தை சேர்ந்த முருகேசன் என்பவர் பழக்கமானவர். முருகேசன் தமிழ்நாடு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக பணியாற்றினார். எனது மகன் வெங்கடேஷ் அவனது நண்பர் செந்தில்குமாருடன் பேசும்போது தான் B.E படித்துவிட்டு வேலையில்லாமல் இருப்பதாக சொல்லியுள்ளார். அதற்கு செந்தில்குமார் தனக்கு தெரிந்த முருகேசன் என்பவர் அரசு வேலை வாங்குவது தொடர்பாக அதிகாரிகள் மற்றும் அரசியல் வாதிகளுடன் தொடர்பில் உள்ளவர் என்று சொல்லியுள்ளார். அதற்கு எனது பையனின் தூண்டியுள்ளார்கள். எனது மகன் என்னிடம் பணம் கொடுத்தால் வேலை வாங்கி விடலாம் என்று சொல்லி கேட்டார். நான் செந்தில்குமாரையும், முருகேசனையும் நம்பி பணம் கொடுக்க ஒப்புக்கொண்டேன். 2016 ஜனவரி கடைசி வாரத்தில் ஒரு நான் செந்தில் குமார், முருகேசனுடன் சாந்தா தேவியின் வீட்டிற்கு முருகேசனிடம் கொடுத்து சாந்தா தேவியிடம் கொடுத்தார். இரண்டு மூன்று மாதத்தில் வேலைக்கு ஆள் எடுப்பார்கள் என்று சொன்னார்கள். அதே வருடம் 10.02.2016ம் தேதி ரூ.9 லட்சத்தை செந்தில்குமார், முருகேசனுடன் நான் சென்று நத்தத்தில் உள்ள சாந்தாதேவியின் வீட்டிற்கு சென்று முருகேசனிடம் ரூ.9 லட்சம் கொடுத்தேன். அவர் என் முன்னாள் சாந்தாதேவியிடம் பணத்தை ஒப்படைத்தார். இரண்டு

வருடங்களாக எனது மகளுக்கு வேலை கிடைக்கவில்லை. முருகேசனிடமும், எதிரிகளிடமும் பணத்தை திருப்பி தருமாறு பலமுறை கேட்டேன். வேலையும் கொடுக்கவில்லை. பணத்தையும் கொடுக்கவில்லை. மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலீசார் என்னை இந்த வழக்கு சம்மந்தமாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் 28 ஆண்டுகளா ஆசிரியர் பணியாற்றி ஓய்வு பெற்றேன் என்றால் சரிதான். எனக்கு எதிரிகள் நேரடியாக பழக்கம் இல்லை என்றால் சரிதான். முருகேசனும் செந்தில்குமாரும் எனக்கு பழக்கமானவர்கள் என்றால் எனது மகனுக்கு பழக்கமானவர்கள். TNPSC, வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாகவோ, கருணை அடிப்படையிலோ தான் கிடைக்கும் என்றால் சரிதான். மத்திய, மாநில அரசு பணிகளை தனிநபர் வாங்கி தர இயலாது என்றால் சரிதான். ரூ.10 லட்சம் எவ்வாறு எனக்கு வந்ததது என்று நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் எந்த தேதியில் எதிரியின் வீட்டிற்கு சென்றேன் என்றால் தேதி எனக்கு ஞாபகமில்லை. வேலைக்காக பணம் வாங்கி விட்டு வேலைக்கு ஏற்பாடு செய்யாவிட்டால் உடனடியாக நடவடிக்கை எடுக்கலாம் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறியது போல் நான் முதல் விசாரணையில் கூறியது போல் சொன்ன தேதியில் சாந்தா தேவியை சந்திக்க வில்லை என்றும், முருகேசனிடமும், செந்தில்குமாரிடமும் ரூ.10 லட்சத்தை கொடுக்கவில்லை என்றாலும், அதை அவர் சாந்தாதேவியிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் 1வது எதிரிகளின் விரோதிகளால் தூண்டப்பட்டு இந்த சாட்சியம் அளிக்கப்பட்டது என்றும், நான் தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

soumya mathew Digitally signed by soumya mathew

Judicial Magistrate
No.II(FAC)
Dindigul.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, DINDIGUL

Case No : CC. 600 /2018
Deposition of witness for PW : 3
பெயர் : இராஜேந்திரன்
கணவர் பெயர் : ரெங்கராஜீ
கிராமம் : மதுரை
மதம் :
வேலை : இல்லை
வயது : 73
நாள் : 11.09.2024

**எதிரிகள் ஆஜர்.**

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>**

நான் தற்போது மதுரையில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எதிரிகளை தெரியும். நத்தத்தை சேர்ந்த முருகேசன் எனது உறவினர். அவர்களிடம் சாந்தாதேவி எனது மகளுக்கு லேப் அசிஸ்டேண்ட் பணி வாங்கி தருவார் அதற்கு 3 லட்ச ரூபாய் கொடுங்கள் என்று சொன்னார். 4.05.2015ம் வருடம் நத்தம் அண்ணா நகரில் வைத்து சாந்தா தேவியின் வீட்டில் வைத்து மூன்று லட்ச ரூபாய் பணத்தை என் மகளுக்கு லேப் அசிஸ்டேண்ட் வேலை வாங்கி தருவதற்காக சாந்தாதேவியிடம் கொடுத்தேன். இரண்டு, மூன்று வருடங்கள் கடந்தும் வேலை கிடைக்கவில்லை. பலமுறை சாந்தாதேவியிடம் கேட்டும் வேலை வந்துவிடும் என்று காலம் கடத்தி வந்தார். பின்பு தான் தெரிந்தது என்னை போல் பலரும் வேலைக்காக பணம் கொடுத்து இருப்பது தெரியவந்தது. வேலை கிடைக்கவில்லை. பணத்தை திருப்பி தருமாறு கேட்டேன். அதற்கு காலம்தாழ்த்தி வந்தார். நத்தம் அருகே உள்ள வீட்டில் சாந்தாதேவி வீட்டை காலி செய்து விட்டு உலுப்பங்குடிக்கு சென்றுவிட்டார். 17.11.2017ம் தேதி பணத்தை கேட்டதற்கு சாந்தாதேவி 50 ரூபாய் பத்திரத்தில் யார் யாருக்கு எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும் என்று சொல்லி எழுதி கையொப்பம் செய்து கொடுத்தார். வேலையும் கிடைக்கவில்லை. பணமும் கிடைக்கவில்லை. பலமுறை அழைந்தும்

கொடுக்கவில்லை. அதனால் திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

## எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

போலீசார் என்னை இந்த வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள் என்றால் தேதி எனக்கு ஞாபகமில்லை. நத்தம் அண்ணா நகர் வீட்டில் வைத்து சாந்தாதேவியிடம் 04.05.2015ம் தேதி 3 லட்சம் கொடுத்தாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். போலீசார் விசாரணையில் பலமுறை எதிரியின் வீட்டிற்கு சென்று பணம் கேட்டதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். சாந்தாதேவி நத்தம் அண்ணா நகர் வீட்டை காலி செய்து விட்டு உலுப்பக்குடிக்கு வீடு மாறி சென்றதாகவும், அங்கும் நான் சென்று பணம் கேட்டதாகவும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அதைபோல் 17.11.2018ம் தேதி எனக்கும் மற்ற நபர்களுக்கும் சாந்தாதேவி எழுதி கொடுத்தார் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். TNPSC, வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாகவோ, கருணை அடிப்படையிலோ தான் கிடைக்கும் என்றால் சரிதான். எனக்கு எதிரிகள் 20 வருடங்களாக நேரடியாக பழக்கமானவர்கள் என்றால் சரிதான். ரூ.3லட்சம் நான் கொடுத்தற்காக எந்த ஆதாரமும் என்னிடம் கிடையாது என்றால் சரிதான். எதிரிகளுக்கு எந்த தேதியில் பணம் கொடுத்து எந்தெந்த தேதியில் அவருடைய வீட்டிற்கு சென்றேன் என்று தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 2வது எதிரி நத்தம் விஷ்வநாதனுக்கும் இடையே பல வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் முதல் விசாரணையில் கூறியது போல் சொன்ன தேதியில் சாந்தா தேவியை சந்திக்க வில்லை என்றும், அவரிடம் ரூ.3 லட்சத்தை தரவில்லை என்றும், பின்னிட்டு எந்த காலக்கட்டத்திலும் அவரை சந்திக்கவில்லை என்றும், அவர் வேலை வாங்கி தருவதாக சொல்லவில்லை என்றும், எந்த பத்திரத்திலும் கையொழுத்து போட்டு தர வில்லை என்றும், அதன் பின்னிட்டு நாங்களோ, மற்றவர்களோ சந்திக்கவில்லை என்றும், நான் 1வது எதிரிகளின் விரோதிகளால் தூண்டப்பட்டு இந்த புகார் அளிக்கப்பட்டது என்றும், நான் தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

soumya mathew

Digitally signed by soumya mathew

Judicial Magistrate
No.II(FAC)
Dindigul.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, DINDIGUL

Case No : CC. 600 /2018
Deposition of witness for PW : 2
பெயர் : மணிகண்டன்
கணவர் பெயர் : சந்திரன்
கிராமம் : மதுரை
மதம் :
வேலை : கடை
வயது : 36
நாள் : 11.09.2024

**எதிரிகள் ஆஜர்.**

**அரசு தரப்பு முதல் விசாரணை**

நான் தற்போது மதுரையில் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். நான் 2011ம் வருடம் MBA படித்து விட்டு மூன்று வருடங்கள் வேலை இல்லாமல் இருந்தேன். எனது அப்பா டான்ஸி நிறுவனத்தில் வேலை பார்த்து ஓய்வு பெற்று அந்த சமயத்தில் இருந்தார். நான் வேலைக்கு முயற்சி செய்து கொண்டிருந்தேன். வேலை கிடைக்கவில்லை. அப்பொழுது எனது சித்தப்பா முருகேசன் என்னிடம் Minsterன் சொந்தக்காரர்கள் அரசாங்க வேலை வாங்கி தருகிறார்கள் என்று சொன்னார். அதனால் நான் சந்தா தேவி, பாரதியிடம் நத்தம் அண்ணா நகரில் உள்ள சாந்தா தேவி வீட்டிற்கு சென்று பேசினோம். அப்போது நத்தம் விஷ்வநாதன் மந்திரியாக இருந்தார். அதனால் மந்திரியின் கோட்டாவில் வேலை வாங்கி தருவதாக எதிரிகள் சொன்னார்கள். அவர்கள் ரூ. 10 லட்சம் பணம் கேட்டார்கள். எனக்கும் எனது அண்ணனுக்கும் சேர்த்து ரூ.9 1/2 லட்சம் பணம் கொடுப்பதாக சொன்னோம். 23.03.2015ம் தேதி நான்கு லட்சம் எதிரியின் வீட்டில் வைத்தும், 27.03.2015ம் தேதி 5 1/2 லட்சம் பணம் எதிரியின் வீட்டில் வைத்து கொடுத்தோம். வேலை உறுதியாக வாங்கி தருகிறோம் என்றும்,

இல்லையென்றால் பணத்தை திருப்பி தருவதாக எதிரிகள் உறுதியளித்தார்கள். 2017ம் வருடம் வரை எனக்கு வேலை வாங்கி தரவில்லை. இடையில் பலமுறை சென்று எதிரிகளிடம் கேட்டோம். எதிரிகள் வேலை கிடைத்துவிடும் என்று சொன்னார்கள். 2017ம் வருடம் எதிரிகளிடம் வேலை சம்மந்தாமாக போன் பண்ணி கேட்டேன், வேலை கிடைத்துவிடும் என்று சொன்னார்கள். பின்பு நான் போன் செய்தால் அவர்கள் போனை எடுக்கவில்லை. எனது சித்தப்பா முருகேசன் என்பவர் மூலம் எதிரிகளிடம் பேசினோம். எனது சித்தப்பா நிறைய பேர் இருக்கிறார்கள். நேரில் வருமாறு சொன்னார்கள். 11.11.2017ம் தேதி பணம் கொடுத்த 10 பேரும் நேரில் சென்று எதிரிகளிடம் பேசினோம். பணத்தை திருப்பி தருமாறு கேட்டோம். எதிரிகள் பணத்திற்கு உத்தரவாதமாக 50 ரூபாய் பத்திரத்தில் யார் யாருக்கு எவ்வளவு பணம் திருப்பி தரவேண்டும் என்று எழுதி கையொப்பம் செய்து கொடுத்தார்கள். மூன்று மாத தவணை கேட்டார்கள். மூன்று மாதம் கழித்து எதிரிகளிடம் சென்று கேட்டபோது மீண்டும் காலஅவகாசம் கேட்டார்கள். மே மாதம் 2ம் தேதி வருடம் நினைவில்லை. எதிரிகள் வீட்டிற்கு சென்றோம். அவர்கள் மாலை 6மணிக்கு பணத்தை தருவதாக சொன்னார்கள். எனக்கு வேலை இருந்ததால் நான் அங்கு இருந்து சென்றுவிட்டேன். சாந்தாதேவி, பாரதி 6 பேர் கொண்ட குழுவை வைத்து கத்தியை காட்டி கொலை மிரட்டல் விடுத்தாக அ.சா.1 சுசிலா சொன்னார். நடந்த சம்மவத்திற்காக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலீசார் என்னை இந்த வழக்கு சம்மந்தமா விசாரித்தார்கள் என்றால் 12.07ம் தேதி விசாரித்தார்கள். வருடம் நினைவில்லை. போலீசார் என்னை விசாரித்தபோது மே மாதம் சம்பவங்கள் நடந்ததாக நான் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரித்தபோது 10 லட்ச ரூபாய் எதிரிகள் கேட்டதாகவும், நான் 9 1/2 லட்ச ரூபாய் கொடுத்ததாகவும் நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். முதன் முதலில் எதிரிகளை எப்போது பார்த்தேன் என்று தேதி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரித்தபோது இரண்டு தேதிகளை தவிர வேறு தேதிகளை சொல்லவில்லை என்றால் சரிதான். ஒருவருக்கு அரசு பணி கிடைக்க வேண்டுமென்றால் TNPSC, வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாகவோ, கருணை அடிப்படையிலோ தான் கிடைக்கும் என்றால்

சரிதான். எனக்கு எதிரிகள் நேரடியாக பழக்கமானவர்கள் அல்ல என்றால் சரிதான். 2015ம் ஆண்டு மின்வாரிய துறையில் தமிழக அரசால் காலி பணியிடங்கள் நிரப்புவதற்காக எந்த அறிவிப்பும் வரவில்லை என்றால் எனக்கு தெரியாது, ரூ.9 1/2 லட்சம் நான் கொடுத்தற்காக எந்த ஆதாரமும் என்னிடம் கிடையாது என்றால் சரிதான். எதிரிகளுக்கு எந்த தேதியில் பணம் கொடுத்து எந்தெந்த தேதியில் அவருடைய வீட்டிற்கு சென்றேன் என்று தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் புகாரில் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். 2வது எதிரி நத்தம் விஷ்வநாதனுக்கும் இடையே பல வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் முதல் விசாரணையில் கூறியது போல் சொன்ன தேதியில் சாந்தா தேவியை சந்திக்க வில்லை என்றும், அவரிடம் ரூ.9 1/2 லட்சத்தை தரவில்லை என்றும், பின்னிட்டு எந்த காலக்கட்டத்திலும் அவரை சந்திக்கவில்லை என்றும், அவர் வேலை வாங்கி தருவதாக சொல்லவில்லை என்றும், எந்த பத்திரத்திலும் கையொழுத்து போட்டு தர வில்லை என்றும், அதன் பின்னிட்டு நாங்களோ, மற்றவர்களோ சந்திக்கவில்லை என்றும், நான் 1வது எதிரிகளின் விரோதிகளால் தூண்டப்பட்டு இந்த புகார் அளிக்கப்பட்டது என்றும், நான் தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

soumya mathew Digitally signed by soumya mathew

Taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

Judicial Magistrate
No.II(FAC)
Dindigul.

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, DINDIGUL

Case No : CC. 600 /2018
Deposition of witness for PW : 1
பெயர் : சுசிலா
கணவர் பெயர் : காந்தி
கிராமம் : மதுரை
மதம் :
வேலை : அரசு ஊழியர் ஓய்வு
வயது : 72
நாள் : 11.09.2024

**எதிரிகள் ஆஜர்.**

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>**

நான் தற்போது விவசாய துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்று மதுரையில் குடியிருந்து வருகிறேன். எதிரிகளை தெரியும். என்னுடன் பணிபுரிந்த வசந்தா அவரது தம்பி முருகேசன் அவர்கள் நத்தம் கோவில்பட்டியில் குடியிருந்து வந்தார்கள். அவர்கள் நத்தம் உலுப்பன்குடியில் சாந்தாதேவி என்பவர் மந்திரியின் உறவினர் என்றும், அவர் அரசு வேலை வாங்கி தருவார் என்றும் என்னிடம் சொன்னார்கள். நான் நத்தம் அண்ணா நகரில் உள்ள சாந்தா தேவி வீட்டிற்கு சென்று சந்தித்தேன். அவர் என்னுடைய மகளுக்கும், மருமகளுக்கும் கால்நடை துறையில் மருத்துவ உதவியாளர் பணி வாங்கி தருவதாக சொன்னார். அவர் பணிக்கு ஒரு நபருக்கு ரூ.2 1/2லட்சம் வீதம் இருவருக்கும் 5 லட்சம் தர வேண்டுமென்று சொன்னார். அதன்பேரில் 11.09.2015ம் தேதி சாந்தா தேவி என்பவரிடம் ரூ.5 லட்சத்தை முருகேசன் என்பவருடன் சென்று உலுப்புக்குடி சாந்தா தேவி வீட்டில் வைத்து சாந்தா தேவியிடம் பணத்தை கொடுத்தேன். இரண்டு மூன்று மாதங்கள் தாமதம் செய்தார்கள். என்னுடன் பணிபுரியும் வசந்தா அவரது தம்பி முருகேசன் என்னிடம் பொறுமையாக கேளுங்கள் ஏற்கனவே மேலும் எட்டு பேர்கள் வேலைக்காக அவர்களிடம் பணம் கொடுத்துள்ளார்கள் என்று என்னிடம் சொன்னார்கள். சாந்தா தேவி என்னிடம் போனில் நம்பிக்கையாக இருக்கும்படி எப்படியாவது வேலை

கிடைத்துவிடும் என்று ஒரு முறை சொன்னார். அதன்பிறகு இரண்டு மாதம் கழித்தும் எந்த தகவலும் வராததால் நான் அண்ணா நகர் வீட்டிற்கு சென்றேன். அங்கு வேலைக்கு பணம் கொடுத்த என்னுடன் சேர்ந்து 10 நபர்கள் அங்கு இருந்தார்கள். நான் நான்கு ஐந்து முறை அவர்களது வீட்டிற்கு சென்று வந்தேன். அதன்பிறகு 11.11.2017ம் தேதி அன்னா நகர் வீட்டிற்கு அப்போது எல்லோரும் வந்து வேலை வாங்கி தருவதாக சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள் எங்களுக்கு ஒரு முடிவை சொல்லுங்கள் என்று கேட்டோம். அதற்கு சாந்தா தேவி 50 ரூபாய் பத்திரத்தில் கையொப்பம் செய்து தருவதாக சொன்னார். நாங்கள் 10 பேரும் யார் யார் எவ்வளவு தர வேண்டும் என்று சொல்லி டைப் செய்து கையொப்பம் வாங்கினோம். அதன்பிறகு மூன்று மாதம் கழித்து ஒரு தேதியில் வருமாறு சாந்தா தேவி சொன்னார். மூன்று மாதம் கழித்து நாங்கள் சென்றோம். 20.06.2018ம் தேதி நாங்கள் 10 பேரும் உலுப்பங்குடி சாந்தா தேவி வீட்டிற்கு சென்றோம். அப்போது நாங்கள் எங்களுக்கு ஏதாவது செய்யவில்லை என்றால் அவரது வீட்டை விட்டு செல்ல மாட்டோம் என்று சொன்னோம். அப்போது அவர்கள் பணத்தை தர முடியாது முடிந்ததை பார்த்து கொள்ளுங்கள் என்று கொலை மிரட்டல் விடுத்தார்கள். அதன்பின்பு 21.06.2018 ம் தேதி திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு சென்று புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் நாங்கள் கொடுத்தது தான். புகாரில் உள்ள கடைசி கையொப்பம் என்னுடையது தான். **(புகாரில் உள்ள சாட்சி சுசிலா என்பவரின் கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் SSLC படித்துள்ளேன். போலீசார் என்னை இந்த வழக்கு சம்மந்தமா விசாரித்தார்கள் என்றால் 21.06.2018ம் தேதி விசாரித்தார்கள். அதற்கு முன்னதாகவும், பின்னிட்டோ விசாரிக்கவில்லை என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரித்தபோது பணம் கொடுப்பதற்கு முன்னதாக எதிரி சாந்தா தேவியை அண்ணா நகர் வீட்டில் வைத்து பார்த்தாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. ரூ.5 லட்சத்தை சாந்தா தேவியிடம் கொடுத்ததாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. போலீசார் விசாரணையில் பணம் கொடுத்தப்பின்னர் இரண்டு மூன்று முறை சாந்தா தேவியின் வீட்டிற்கு சென்றதாகவும், அவர் பணம் கிடைத்துவிடும் என்று நம்பிக்கையாக சொன்னதாக சொல்லியுள்ளேன்

என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் சாந்தா தேவியின் வீட்டிற்கு சென்றபோது ஏற்கனவே பணம் கொடுத்த 10 நபர்கள் அங்கு இருந்தார்கள் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். 20.062018ம் தேதி நானும், அங்கு சென்றிருந்தேன். மற்ற 10 பேருகளும்அங்கு இருந்தார்கள். எதிரி கொலை மிரட்டல் விடுத்தாகவும் நான் சொன்னோன என்றால் சொல்லியுள்ளேன். நானும் அரசு பணியில் எத்தனை ஆண்டுகள் பணிபுரிந்து ஓய்வு பெற்றேன் என்றால் 27 ஆண்டுகள். ஒருவருக்கு அரசு பணி கிடைக்க வேண்டுமென்றால் TNPSC, வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாகவோ, கருணை அடிப்படையிலோ தான் கிடைக்கும் என்றால் சரிதான். வேறு எந்த வகையிலும் ஒருவர் வேலை வாங்க முடியாது என்றால் சரிதான். தமிழக அரசு பணியிலோ, மத்திய அரசு பணியிலோ தனிப்பட்ட முறையில் ஒருவர் வேலை வாங்கி தர இயலாது என்றால் சரிதான். எனக்கு எதிரிகள் நேரடியாக பழக்கமானவர்கள் அல்ல என்றால் சரிதான். வசந்தா என்பவர் எனக்கு எவ்வளவு ஆண்டுகள் பழக்கம் என்றால் 13 ஆண்டுகள். 2015ம் ஆண்டு கால்நடை துறையில் தமிழக அரசால் காலி பணியிடங்கள் நிரப்புவதற்காக எந்த அறிவிப்பும் வரவில்லை என்றால் எனக்கு தெரியாது, ரூ.5 லட்சம் நான் கொடுத்தற்காக எந்த ஆதாரமும் என்னிடம் கிடையாது என்றால் சரிதான். அந்த 5 லட்ச ரூபாய் எனக்கு எவ்வாறு கிடைத்ததது என்று source பற்றியும் நான் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் சாந்தா தேவிக்கு எந்த தேதியில் பணம் கொடுத்தாகவும் பின்னிட்டு எந்த தேதிகளில் அவரது வீட்டிற்கு சென்றதாகவும், நான் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த புகார் எங்கு எப்போது யாரால் டைப் செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அந்த புகாரை 21.06.2018ம் தேதி கொடுத்துள்ளோமா என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த புகாரில் கையொப்பம் செய்துள்ள மற்ற நபர்களின் முகவரியோ, விபரங்களோ எனக்கு தெரியாது என்றால் 2,3 நபர்களை எனக்கு தெரியும். வேலை வாங்குவதற்காக பணம் கொடுத்துவிட்டு வேலை வாங்கி தரவில்லை என்றால் உடனடியாக புகார் கொடுக்கவேண்டும் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 21.06.2018ம் தேதிக்கு முன்பாக நான் வேறு புகாரை கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. மந்திரியை தெரியும் வேலை வாங்கி தருவதாக எதிரிகள் சொன்னதாக முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன். வழக்கின் 2வது எதிரிக்கும் மந்திரிக்குமிடையே பல வழக்குகள் நிலுவையில் உள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக DCB போலீசார் என்னை விசாரித்தபோது எதிரி வீட்டிற்கு சென்ற இரண்டு நாட்களை தவிர வேறு எந்த தேதியையும் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

20.06.2018ம் தேதி எதிரி கொலை மிரட்டல் விடுத்ததாக நான் கூறியுள்ள சங்கதியை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் தேதி குறிப்பிடவில்லை. கொலை மிரட்டல் விடுத்ததாக சொல்லியுள்ளேன். எந்த வகையில் கொலை மிரட்டல் விடுத்ததாக நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறியது போல் சொன்ன தேதியில் சாந்தா தேவியை சந்திக்க வில்லை என்றும், அவரிம் ரூ.5 லட்சத்தை தரவில்லை என்றும், பின்னிட்டு எந்த காலக்கட்டத்திலும் அவரை சந்திக்கவில்லை என்றும், அவர் வேலை வாங்கி தருவதாக சொல்லவில்லை என்றும், எந்த பத்திரத்திலும் கையொழுத்து போட்டு தர வில்லை என்றும், அதன்பின்னிட்டு நாங்களோ, மற்றவர்களோ சந்திக்கவில்லை என்றும், அ.த.சா.ஆ.1 நான் சொன்ன முறையில் காவல் துறையிடம் புகார் அளித்துள்ளேன். நான் 1வது எதிரியின் விரோதிகளால் தூண்டப்பட்டு இந்த புகார் அளிக்கப்பட்டது என்றும், நான் தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

soumya mathew

Digitally signed by soumya mathew

Judicial Magistrate
No.II(FAC)
Dindigul.